21.04.2025

O.S.No.414/2019

PW2 திரு.சதீஷ்குமார்

சாட்சி வா.த.சா.2 மீண்டும் அழைக்கப்பட்டு சத்தியப்பிரமாணம் செய்விக்கப்பட்டு குறுக்கு விசாரணை செய்ய அனுமதிக்கப்படுகின்றார்.

எனக்கும் வாதிக்கும் எந்த ஒரு உறவு முறையும் இல்லை. என்னுடைய நிரூபண வாக்குமூலத்தில் உள்ள முகவரி என் வீட்டு முகவரி. இந்த வீட்டில் நான், என்னுடைய மனைவி மற்றும் குழந்தைகளுடன் வசித்து வருகின்றேன். இதே முகவரி 2 போர்ஷனாக உள்ளது. அந்த 2வது போர்ஷனுக்கும் இது தான் முகவரி. 2வது போர்ஷனை வாடகைக்கு விட்டிருக்கின்றேன். மற்றொரு போர்ஷனில் வாதி மனோன்மணி வாடகைக்கு குடியிருந்தார். எந்தக் காலத்தில் இருந்து எந்த கால கட்டம் வரை வாதி வாடகைக்கு இருந்தார் என்று எனக்கு ஞாபகம் இல்லை. அவருடன் வாடகை ஒப்பந்தம் எதுவும் போடவில்லை. மாத வாடகை ரூ. 3,000/- முதல் 4,000/- இருக்கும். ஒரு 6 மாத காலம் வாடகைக்கு குடியிருந்திருப்பார் என்றால் சரிதான். நான் தனியார் கம்பெனியில் செக்யூரிட்டியாக வேலைபார்த்து வருகின்றேன். வாதியை எனக்கு 30 ஆண்டுகளாகத் தெரியும். வாதியின் குடும்ப விவரங்கள் எனக்குத் தெரியும். வாதி தன்னுடைய மகன் மற்றும் மருமகளுடன் வாழும் பொழுது நான் அவ்வப்பொழுது போவேன் வருவேன். வாதியின் குடும்ப விவகாரங்கள் வாதி சொல்லித்தான் எனக்குத் தெரியும் என்றால் சரியல்ல. நான் அங்கு போகும் பொழுது தெரியும். அந்த விவகாரங்கள் வாதி சொல்லி எனக்கு தெரியுமா அல்லது பிரதிவாதி சொல்லித்தெரியுமா என்றால் வாதியும் சொல்வார் பிரதிவாதியும் சொல்வார். நான் இருவர் சொல்வதையும் கேட்டுக்கொள்வேன். நான் தற்பொழுது நீதிமன்றத்தில் வாதி மனோன்மணி சொல்லித்தான் சாட்சியம் அளிக்கின்றேன் என்றால் சரிதான். நான் தாக்கல் செய்துள்ள பிரமாண வாக்குமூலம் பத்தி 4ல் ''மருத் துவமனையில் ஏற்பட்டட செலவுகள் அனைத்தையும் இந்த வழக்கின் வாதியானவர் ஏற்றுக்கொண்டார்'' என்று சொல்லியிருக்கின்றேன் என்றால் சரிதான்.

அப்படியென்றால் வாதிதான் பில் தொகையை கட்டினாரா என்றால் அவர்கள் தான் கட்டினார்கள். நான் மனோன்மணியம்மாளுடன் கூட இருந்து கட்டினேன். அவ்வாறு மருத்து பில்களை கட்டியதற்குரிய ஆவணங்களை நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளாரா என்ற விவரம் பற்றி எனக்குத் தெரியாது. எனக்கு இந்த வழக்கை பற்றி முழு விவரமும் தெரியாததால் தான் பில் தாக்கல் செய்யப்பட்டதா இல்லையா என்று தெரியவில்லை என்றால் சரியல்ல. வாதியின் மகள் சந்தோஷ சவுந்தரி என்னுடைய வங்கி கணக்கிற்கு பணம் அனுப்புவார். மருத்துவ செலவு மற்றும் ஏதேனும் செலவு ஏற்பட்டால் என்னுடைய வங்கிக் கணக்கிற்கு அனுப்புவார். இது போல என்னுடைய வங்கி கணக்கிற்கு இது வரை எவ்வளவு பணம் அனுப்பினார்கள் என்று ஞாபகம் இல்லை. அந்த விவரங்கள் எல்லாம் என்னுடைய வழக்கறிஞர் வசம் இருக்கின்றது. அந்த ஆவணத்தை இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்திருக்கின்றேனா என்றால் அது பற்றி எனக்குத் தெரியவில்லை. வாதி மனோன்மணிக்கு வங்கி கணக்கு இருக்கின்றது. சநதோஷ சவுந்தரி அம்மாவிற்கு கணக்கு இருக்கும் பொழுது என்னுடைய வங்கி கணக்கிற்கு பணத்தை ஏன் அனுப்ப வேண்டும் என்றால் அவர் வயதானவர் என்பதால் அவரால் போக முடியாது அதனால் நான் சென்று எடுத்துக்கொடுப்பேன். எவ்வளவு ஆண்டுகளாக இப்படி உதவி செய்து வருகின்றேன் என்றால் பல ஆண்டுகளாக உதவி செய்து வருகின்றேன். அதனால் இந்த அம்மாவிற்கு பல ஆண்டுகளாக வங்கி பரிவர்த்தனை இல்லை என்றால் எனக்கு அது பற்றி தெரியாது எனக்கு அனுப்பிய பணத்தை கொண்டுபோய் கொடுப்பேன். சந்தோஷ சவுந்தரி மகள் பிளசினி என்பவர் பிரதிவாதியின் பராமரிப்பில் இருந்துவந்தார் என்றால் எல்லாரும் ஒன்றாகத்தானே இருந்து வந்தார்கள். மனோன்மணிக்கு மாத வருமானம் எதுவும் இல்லை. அதனால் அவர்கள் எந்த செலவு செய்தாலும் சந்தோஷ சவுந்தரி அனுப்பினால் தான் உண்டு என்று சொன்னால் சரிதான். எனது வங்கி கணக்கில் பணம் போடும் பொழுது குறிப்பிட்ட செலவிற்காக போடுவாரா என்றால் எனக்கு ஞாபகம் இல்லை. சந்தோஷ சவுந்தரி எனக்கு பணம் போட்டதெல்லாம் எனக்கும்

அவருக்கும் இடையே இருந்த தனிப்பட்ட பரிமாற்றம் என்றால் அவ்வாறு இல்லை. அவ்வாறு நான் குறிப்பிட்டதை போல் மருத்துவ செலவிற்காக பணம் அனுப்பியிருந்தால் அது பற்றிய ஆவணத்தை நான் நீதிமன்றத்தில் தாக்கல் செய்திருப்பேன் என்றாலும் நான் அவ்வாறு தாக்கல் செய்யாததால் அப்படிபட்ட பரிவர்த்தனை எதுவும் நடைபெறவில்லை என்றால் சரியல்ல. சந்தோஷ சவுந்தரியின் நகைகளை பிரதிவாதியின் கணவர் வாசன் வங்கியில் அடமானம் வைத்து கொடுத்தார். அடமானம் வைக்கும் பொழுது நான் கூட செல்லவில்லை. ஆனால் அடமானம் வைத்தது எனக்குத் தெரியும். அடமானம் வைத்தது வாசன் என்பதால் அவர் எதற்காக அடமானம் வைத்தார் என்பதும் அந்த பணத்தை என்ன செய்தார் என்பதும் அவருக்கு மட்டும் தான் தெரியும் என்றால் சரிதான். நகை அடகு வைத்தது பின்னாளில் வாசன் சொல்லி எனக்குத் தெரியும். என்னுடைய நிரூபண வாக்கமூலத்தில் வாசன் சொல்லித்தான் எனக்குத் தெரியும் என்று நான் சொல்லவில்லை. என் நிரூபண வாக்குமூலம் பத்தி 5ல் உண்மையில் பிரதிவாதிக்கு உதவுவதற்காக நான் அவரிடம் நேரடியாக சென்று பணம் அளித்துள்ளேன் என்று குறிப்பிட்டுள்ளேனா என்றால் நான் இந்த இடத்தில் பிரதிவாதி என்று குறிப்பிட்டிருப்பது மனோன்மணியைத் தான். வாசன் இறந்த பொழுது அவரது இறுதி சடங்கிற்கு வாசன் வேலை செய்த அலுவலகத்தில் இருந்து ரூ.25 ஆயிரம் கொடுத்தது பற்றி எனக்குத் தெரியாது. என்னுடைய நிரூபண வாக்குமூலம் பத்தி 5ல் கூறியது போல் வாதியும் பிரதிவாதியும் சமரசம் பேசி அதில் வாசனுக்கு கிடைக்க பெறும் ஓய்வூதியத்தை இருவரும் சமமாக பிரித்துக்கொள்வதென்று முடிவு செய்து எழுத்து மூலமாக ஏற்படுத்திக்கொண்டனர் என்று கூறியிருக்கின்றேன். அவ்வாறு ஏற்படுத்திக் கொள்ளும் பொழுது நான் அங்கு இல்லை ஆனால் தெரியும். அந்த எழுத்து மூலமான ஆவணத்தை இந்நீதிமன்றத்தல் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். எனக்கு நேரடியாக எந்த விவரமும் தெரியாமல் வாதிக்காக பொய் சாட்சியம் அளிக்கின்றேன் என்றால் சரியல்ல.

மறுவிசாரணை :- இல்லை.